**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 205/2024**

**Dated: 10.02.2026**
**Deposition of Witnesses for PW -3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.எழில்சுரேஷ்சிங்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1 2 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் உட்கோட்டம் திசையன்விளை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2023 ம் தேதி 21.30 மணிக்கு எனது தகவலாளி என்னை தொடர்பு கொண்டு ராமேஸ்வரம் to தனுஸ்கோடி செல்லும் வழியில் உள்ள ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னாண்டி என்பவரது குடிசையின் அருகில் வைத்து அவரும் முத்துராமலிங்கம் என்பவரும் கஞ்சா விற்பனை செய்து வருவதாகவும் காலை 05.00 மணி முதல் 06.00 மணிக்குள் வந்தால் அவர்களை

கஞ்சாவுடன் பிடித்துக்கொள்ளலாம் என்று கூறிய தகவலை நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தும் அவர்கள் உத்தரவின் பேரில் 30.08.2023 ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு SSI பெரியகருப்பன், தலைமை காவலர் குமார் என்பவருடன் தேவையான உபகரணங்களை எடுத்துக்கொண்டு காவல் ஆய்வாளர் வாகனத்தில் புறப்பட்டு சென்று 05.00 மணிக்கு தகவலாளியுடன் தகவலாளி சொன்ன இடத்துக்கு சென்று சேர்ந்தோம். மறைந்து இருந்து கண்காணித்து கொண்டிருந்த போது அங்கு வந்த 2 நபர்களை அடையாளம் காண்பித்துவிட்டு தகவலாளி சென்று விட்டார். மேற்கண்ட நபர்களை பிடித்து விசாரித்த போது தகவலாளி கூறிய படி பேர் விலாசம் சரியாக இருந்தது. அதிகாலை வேளை என்பதால் தனிநபரின் சாட்சிகள் யாரும் வராத காரணத்தினால் என்னுடன் அழைத்து சென்ற SSI பெரிய கருப்பன், தலைமை காவலர் குமார் என்பவரை சாட்சிகளாக கொண்டு மேற்கண்ட நபர்களிடம் நீவீர் கஞ்சா விற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது. உம்மை சோதனை செய்ய அரசு பதிவு பெற்ற அதிகாரியின் முன்போ அல்லது நீதித்துறை நடுவர் முன்போ அழைத்து சென்று சோதனை செய்யும் படி கூற உமக்கு உரிமை உண்டு, அவர்களிடம் விருப்பத்தை கேட்ட போது போலீஸ் அதிகாரியாகிய தாங்களை சோதனை செய்யலாம் என்ற கூறியதை பதிவு செய்து அவர்களிடம் கையெழுத்து பெற்று சோதனை செய்த போது எதிரிகளின் கையில் கஞ்சா இருந்தது. அவர்கள்

கையில் வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த கஞ்சாவை எடை போட்டு பார்த்த போது 1.800 கிகி இருந்தது. அதை அத்தாட்சியில் கைப்பற்றினோம். இதனை குறித்து அவர்களிடம் விசாரித்தபோது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் SSI பெரியகருப்பன், தலைமை காவலர் குமார் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி நபர்களையும் கஞ்சாவையும் நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண் 8/23 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(II)B NDPS Act வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த தகவல் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் கொடுத்த கைது அறிவிப்புகள் அ.த.சா.ஆ 7, 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வு நமுனாக்கள் அ.த.சா.ஆ 9,10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தக்க வழி காவலுடன் நீதிமன்றம் காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அது அ.த.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை நீதித்துறை நடுவர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்ட சொத்து விவர பட்டியல் Annexure I அ.த.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Annesure II அ.த.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்படங்கள் 2 அ.த.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மாதிரிகளை

இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற உத்தவின் படி ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து பகுப்பாய்வு அறிக்கை பெற்று சாட்சிகள் பெண் தலைமை காவலர் தீபா, பெரிய கருப்பன், குமார் பகுப்பாய்வினர் வெங்கடேசன் ஆகியோர்களே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(II)B NDPS Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து தலா 50 கிராம் வீதம் பகுப்பாய்விற்காக எடுக்கப்பட்ட மாதிரிகள் சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடாக குறியீடு செய்யப்படுகிறது. மீதமுள்ள கஞ்சா சா.பொ. 3ஆக குறியீடாக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் மற்றும் புலன்விசாரணை அதிகாரி என்றால் சரிதான். நான் வழக்கு கோப்புகளை பார்த்து தான் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய ரகசிய தகவலை உயர் அதிகாரிக்கு அனுப்பியதாகவும், அவர் பெற்றுகொண்டதற்காகவும், குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களையும் யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன் தற்சமயம் உடன் வந்த காவலர் எழுதினார்கள் யார் யார் என்ற ஆவணத்தை எழுதினார்கள் என்றால் எனக்கு தற்சமயம் நினைவில்லை என்றால் சரிதான். தகவல் வந்தவுடன் ரெய்டிற்கு தனிநபர் சாட்சிகள் மற்றும் விஏஓ தலையாரி

ஆகியோர்களை அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் இரண்டு எதிரிகளுக்கும் ஒரே சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் மாதிரிகள் எடுத்த விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மாதிரிகள் நீதித்துறை நடுவர் முன்பு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். படிவம் 91 ல் மாதிரிகள் நாங்கள் எடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர் வரைபடம் ஏதும் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். குடிசைப்பகுதி யாருக்கு சொந்தமானது என்று காண்பிக்கக்கூடிய வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதிகாலை 5.30 மணியளவில் இருட்டான நேரத்தில் எங்கு வைத்து ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்ற விபரம் ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல் தகவல் வந்ததாக சொல்வது பொய்யென்றும் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றதாக சொல்வது பொய்யென்றும் காவலர்களுடன் ரெய்டுக்கு சென்றதாக சொன்னது பொய் என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை பார்த்ததாகவும் எதிரிகளிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொன்னது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு வழக்கு தோதிற்குகாக வேறு நபர்களால் தாயாரித்து வைத்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்களில் மேஜை வேலையாக கையொப்பம் செய்து விட்டு தற்சமயம் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரெய்டுக்கு செல்லாத காரணத்தினால் தான் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு பொய் வழக்கு என்பதால் தான் நானே இவ்வழக்கில் புலன் அதிகாரியாகவும் இருந்து

புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் போதை பொருட்கள் சட்ட விதிமுறைகள் முறையாக கடைபிடிக்காமல் பொய் வழக்கு பதிவு செய்து முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

**இல்லை.**

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.